19th July 1957]

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் தொழில் துறையில் அரசாங்கம் பங்குகொள்வது என்று தீர்மானித்துவிட்டால் அதில் வரும் லாப நஷ்டத்திற்கும் உள்ளாகத்தான் நேரும் என்று சொன்னார்கள். பிறருடைய தனியார் தொழிலில் பங்கு எடுத்துக்கொண்டு இந்த நிலைமைக்கு உள்ளாவதைவிட தனிப்பட்ட முறையிலேயே அரசாங்கம் அத்தொழில்களை நடத்துவது நல்லதல்லவா ? லாப நஷ்டம் ஏற்படுமானாலும் கூட முதலுக்கே மோசம் வராமல் இருக்கவாவது அரசாங்கம் கவனித்துக் கொள்ள முடியாதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எந்தத் தொழிலிலாவது நஷ்டம்வரும் என்று தெரிந்தால் அரசாங்கம் அதில் பங்கு எடுத்துக் கொள்ளாது. நல்ல முறையில் தொழில் நடக்கும் என்று தெரிந்தால்தான் பணம் இல்லாதவர்களுக்கு ஊக்கம் அளிக்க சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்பதாக இந்த சட்டசபையே வகுத்த கொள்கையில் ஒன்று இருக்கிறது என்று நம்புகிறேன். அதைப் பொறுத்து நியாயமான முறையில் நடத்தப்படும். அமைக்கப்படும் தொழில்களுக்கு சர்க்கார் உதவி அளிப்பது சரியாகும் என்று நம்புகிறேன்.

SRI N. R. THIAGARAJAN : இரண்டு கம்பெனிகள் ராமநாதபுரம் ஜில்லாவில் சிமெண்டு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்குப் போட்டி போடுவதாகவும் ஏதாவது ஒன்றுக்கு லைசென்சு வழங்க அரசாங்கம் யோசித்து வருவதாகவும் மந்திரி அவர்கள் சொன்னார்கள். மதுரை ஜில்லாவில் பெரியகுளம் தாலுக்காவில் வைகை அணைப்பகுதியில் 50 சதுர மைல் விஸ்தீர்ணத்திற்கு சிமிண்டு உற்பத்திக்கான மூலப் பொருள்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே ராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு சிமெண்டு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ஒரு கம்பெனிக்கு லைசென்சும், மதுரை ஜில்லாவில் ஒரு கம்பெனியை ஆரம்பிப்பதற்கு மற்றொரு கம்பெனிக்கு லைசென்சும் வழங்க அசாசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : யாராவது முயற்சி எடுத்துக்கொண்டால் மதுரையில் ஒரு சிமிண்டு பாக்டரியை ஆரம்பிப்பது பற்றியும் அரசாங்கம் முயற்சிசெய்யும். சர்க்கார் எல்லாவிதமான உதவியும் செய்வதற்கு தயாராய் இருக்கிறார்கள்.

SRI A. A. RASHEED : May I know how many new licences have been issued for opening cement factories in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate question may be put.

*Rice stock in the State.*

* 144 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is sufficient stock of rice available in this State for distribution in 1957–58 ; and

(*b*) whether the Government have taken steps to check the rise in price of rice?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. With the stock now available and the stock that will become available in the future, the Government hope to cover the distribution in 1957–58.

(*b*) Yes, Sir.

[19th July 1957

**Sri S. PAKKIRISAMI PILLAI**: பர்மாவிலிருந்து எவ்வளவு அரிசி இப்பொழுது நம் சென்னை ராஜ்யத்திற்கு வந்திருக்கிறது. அது எப்போது விநியோகிக்கப்படும்?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: பர்மா அரிசி என்று தனியாக சென்னை அரசாங்கம் ஸ்டாக் வைத்துக்கொள்வதில்லை. மத்திய அரசாங்கம்தான் ஸ்டாக் வைத்திருக்கிறது. பர்மாவில் இருந்து வரவழைக்கப்பட்ட அரிசியோ, மற்ற நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட அரிசியோ அவர்கள் ஸ்டாக் வைத்திருக்கும் அரிசியிலிருந்து அவ்வப்போது நமக்குத் தேவைப்படுகிற அரிசியை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

**Sri K. VINAYAKAM**: Sir, in view of the soaring price of rice and the non-availability of sufficient quantity of rice in the City of Madras and also in view of the fact that considerable difficulty has been felt in opening fair price shops, will the Government think of the possibility of entrusting the entire work of licensing these retailers to the Collector of Madras direct instead of through the channel of the Board of Revenue?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: Sir, I do not admit that there is any scarcity of rice felt in the City of Madras or anywhere in the State. Prices are no doubt high. But still the rise in price has also been checked to some extent recently. Of course the Collector of Madras has been authorized to fix fair price shop dealers. The number of fair price shops that should be opened is fixed by the Board of Revenue.

9–20 a.m. **Sri A. GOVINDASAMY**: அரிசி விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். எந்த விதமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: சென்ற ஆண்டில் அரிசி விலை குறைந்தபோது இந்தச் சபையில் உள்ள கனம் அங்கத்தினர்கள் கூட அரிசியை அப்போது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென்று சொன்னார். அப்படி ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த அரிசி இப்போது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகக்கூடாது என்த் தடை செய்யப்பட்டிருக்கிறது.

அதோடு நியாய விலைக் கடைகள் ஆங்காங்கு திறக்கப்பட்டு, அரசாங்கம் நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு குறைந்த விலையில் மக்களுக்கு அரிசி கொடுத்து வருகிறார்கள். இதனால் ஓரளவு அரிசி விலை அதிகப்படுவது குறைந்திருக்கிறது.

அதோடு சமீபத்தில் பார்லிமெண்டு சபையில் நிறைவேற்றப்பட்ட எசென்ஷியல் கமாடிடி ஆக்ட் திருத்தச் சட்டப் பிரகாரம் அரிசி விலையைக் கட்டுப்படுத்த, கழிந்த ஜூன் மாதம் 6-ந் தேதிக்கு முன்பிருந்த மூன்று மாதங்கள் வரையில் இருந்த சராசரி விலைக்கே, தனிப்பட்ட முதலாளிகள் ஸ்டாக் தேக்கி வைத்திருந்தாலும் அரசாங்கமே தலையிட்டு எடுத்துக்கொண்டு விற்கதக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு ரூபாய்க்கு மேல் விலை அதிகமாகப் போனால் அரசாங்கம் எங்கு எங்கு ஸ்டாக் இருக்கிறதோ அதை அந்த ஒரு ரூபாய் விலைக்கே வாங்கிக் கொள்கிற திட்டம் இப்போது உருவாக்கப்பட்டு தயாராய் இருக்கிறது. ஆனால் அந்த அளவிற்கு அரிசி விலை ஏறவில்லை.

**Sri K. VINAYAKAM**: Sir, the present system of distribution of retail shops based upon the population of Divisions concerned, for instance one shop for 8,000 people in the City of Madras. Under these circumstances, only very few Fair Price Shops are